

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தே.மு.தி.க. பொதுச் செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் அவர்களின் தாயார் திருமதி அம்சவேணி அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி சென்னை, சாலிகிராமத்திலுள்ள எல்.கே. சுதீஷ் அவர்களின் இல்லத்திற்கு நேற்று (7.10.2025) நேரில் சென்று, உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன், அமைச்சர்கள் எ.வ. வேலு, தங்கம் தென்னரசு, மா. சுப்பிரமணியன், ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் உள்ளனர்.

### தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை முன்னாள் இயக்குநர்

# நடன. காசிநாதன் மறைவு, தொல்லியல் துறைக்குப் பேரிழப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, அக்.8 – தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை முன்னாள் இயக்குநர் நடன. காசிநாதன் அவர்களின் மறைவையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், "நடன. காசிநாதன் அவர்களின் மறைவு தொல்லியல் துறைக்குப் பேரிழப்பு" என்று குறிப்பிட்டுள்ளார்.**

**முதல்வர் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:–**

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் முன்னாள் இயக்குநர் நடன. காசிநாதன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வேதனையடைந்தேன்.



நடன. காசிநாதன் அவர்கள் பல்வேறு கல்வெட்டுகள், செப்புப் பட்டயங்கள், பழமையான சிற்பங்கள், நடுகற்களைக் கண்டுபிடித்த பெருமைக்குரியவர். தமிழரின் தொன்மையை நிலைநாட்ட நமது திராவிட மாடல் அரசு ஆற்றி வரும் பணிகளுக்கு முன்னோடியாகப் பூம்புகார் ஆழ்கடலாய்வு உள்ளிட்ட பல ஆய்வுகளைச் செய்தவர்.

வட்டெழுத்துக் கல்வெட்டுகளைச் சரளமாகப் படிக்கக் கூடிய ஆற்றல் பெற்ற திரு. நடன. காசிநாதன் அவர்கள் தமிழ்நாடெங்கும் வரலாற்றுக் கருத்தரங்குகளையும், கல்வெட்டுப் பயிற்சி வகுப்புகளையும் நடத்திப் பல இளைஞர்களும் இத்துறையில் ஆர்வம் பெற உழைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்லெழுத்துக் கலை, சோழர் செப்பேடுகள், தமிழர் காசு இயல், இராசராசேச்சுரம் முதலிய பல தமிழ் நூல்களையும், Under Sea Exploration off the shore of Poompuhar, The Metropolis of the Medieval Cholas முதலிய ஏராளமான ஆங்கில நூல்களையும் எழுதியதோடு, பல நூல்களைப் பதிப்பித்து, தொல்லியல் ஆய்வுத் துறைக்கு மிகப் பெரும் பங்களிப்பை ஆற்றியவர் திரு. நடன. காசிநாதன் அவர்கள்.

இவரது அளப்பரிய பங்களிப்புகளுக்கு அங்கீகாரமாகத் தமிழ்நாடு அரசின் உ.வே.சா. விருது, சிறந்த நூல் விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்ற ஆய்வுச் செம்மல் நடன. காசிநாதன் அவர்கள்.

பணி ஓய்வுக்குப் பின்னும், தீவிரமாகத் தன் ஆய்வுப் பணிகளைத் தொடர்ந்த அறிஞரான நடன. காசிநாதன் அவர்களது மறைவு தொல்லியல் துறைக்குப் பேரிழப்பு. அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தார், அறிஞர் பெருமக்கள், மாணவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# முதலீட்டிற்கு உகந்த இடம் தமிழ்நாடு - தனித்துவத்தை உறுதி செய்யும் தமிழ்நாடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை ! ... முதல் பக்கத் தொடர்ச்சி

- கோவை வரப்பட்டியில், 360 ஏக்கரில் 'பாதுகாப்பு தொழிற்துறைப் பூங்கா' அமைக்கப் பட்டு வருகிறது.
- விமான பழுதுபார்த்தல், பராமரிப்பு மற்றும் ஒருங்கிணைப்பு பணிகள் மேற்கொள்ள நேரடியாக ஓடுதள அணுகு வசதியுடன் கூடிய வான்வெளிப் பூங்கா, சூலூரில் 200 ஏக்கரில் அமைக்கப் பட்டு வருகிறது.
- திருச்சியில் 90க்கும் மேற்பட்ட MSME நிறுவனங்கள் இயந்திரவியல் உற்பத்தித் துறையில் தங்கள் தொழில்களை பெருக்க TREAT அமைப்பு உதவுகிறது.
- சென்னைக்கு அருகில் வல்லம் வடகாலில் வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் பரிசோதனை வான்வெளி நிறுவனங்களுக்காக அமைக்கப்பட்டு வரும் 'ஏரோஹப்' என்ற திட்டம் முடிவடையும் நிலையில் இருக்கிறது.

இப்படி, இதுபோன்ற அனைத்துத் திட்டங்களும், முதலீடுகளை ஈர்த்தல் புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்துதல் இந்தத் துறையில் இந்தியாவின் தற்சார்பை உறுதி செய்தல் ஆகியவற்றில் தமிழ்நாட்டின் தனித்துவத்தை உறுதி செய்கிறது.

ஒசூரில் நடைபெற்ற TN Rising முதலீட்டாளர் மாநாட்டில் வானூர்தி மற்றும் பாதுகாப்பு துறையில் ஈர்க்கப்பட்ட முக்கியமான முதலீடுகள் உலகளவில் உற்பத்தித் துறையில் ஓசூர் நகரத்தின் பங்கை உறுதி செய்கிறது. இந்த முதலீடுகள், தமிழ்நாட்டின் தொழிற்துறைச் சூழல், திறமையான மனிதவளம் மற்றும் சிறப்பான உற்பத்தி சங்கிலிக்கு சான்றாக இருக்கிறது.

தமிழ்நாடு பாதுகாப்பு தொழிற்துறை வழித்தடத் திட்டத்தை செயல்படுத்த தொடங்கியதில் இருந்து, இதுவரை 23 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் முதலீடுகள் ஈர்க்கப்பட்டிருக்கிறது. இதில், 5 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டிருக்கிறது.

2032க்குள், 75 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டை ஈர்க்க நாங்கள் இலக்கு நிர்ணயித்திருக்கிறோம். இந்த வழித்தடத்தில் இருக்கும், ஒவ்வொரு நகரமும் தனித்துவமான மையங்களாக விளங்குகிறது.

சென்னை என்பது ஆராய்ச்சி மற்றும் கடற்படை அமைப்புகளுக்கான மையமாகவும், கோயம்புத்தூர் - நுண்பொறியியல் திறனுக்கான மையமாகவும், ஓசூர் - வான்வெளி மற்றும் மின்னணு தொழில்நுட்ப மையமாகவும், சேலம் - உயர் தொழில்நுட்பப் பொருட்கள் மையமாகவும், திருச்சி - கனரக இயந்திர உற்பத்தி மையமாகவும் இருக்கிறது. இவை எல்லாம் ஒன்றாக சேர்த்து, தமிழ்நாட்டின் ஒவ்வொரு பகுதியும் முதலீட்டிற்கு உகந்த இடமாக விளங்குவதைக் காட்டுகிறது.

தூத்துக்குடியில் இருக்கும் உட்கட்டமைப்பு வசதிகளை வைத்து விண்வெளித் துறையில் பொருளாதார வளர்ச்சிக்கான தெளிவான திட்டப்பாதையை நாங்கள் வகுத்திருக்கிறோம். இந்திய விண்வெளித் துறை வளர்ச்சிக்கு தமிழ்நாடு உறுதுணையாக இருக்கும். சென்னை காட்டுப்பள்ளி கப்பல் கட்டும் தளம், சூலூர் மற்றும் வல்லம் வடகால் வான்வெளி பூங்காக்கள் தூத்துக்குடியில் அமையவுள்ள விண்வெளிப் பூங்கா ஆகிய அனைத்தும் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், நாட்டின் பாதுகாப்புத் துறைக்கும் உறுதுணையாக இருக்கிறது.

**மூதலீடுகள் செய்ய காத்திருக்க வேண்டாம்!**

இந்த மாநாட்டில், பங்கேற்றிருப்பவர்களிடம் நான் சொல்ல விரும்புவது, தமிழ்நாட்டில் உங்களை கவரும் தொழில் சூழல் இருக்கிறது. திறமையான இளைஞர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் பெரிய தொழில் நிறுவனங்களின் பங்களிப்பு மட்டுமல்ல, MSME நிறுவனங்களின் பங்கும் பெரிய அளவில் இருக்கிறது. அதில், 700க்கும் மேற்பட்டவை வான்வெளி மற்றும் பாதுகாப்புத் துறையில் செயல்படுகிறது. பன்னாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய காத்திருக்க வேண்டியதில்லை. தமிழ்நாடு இப்போதே தயாராக இருக்கிறது.

> **இன்று இந்த நிகழ்வில். எங்களோடு இணைந்திருக்கும் 19க்கும் மேற்பட்ட நாடுகளுடன் சேர்ந்து, தொழில் வளர்ச்சிக்காக செயல்படுவோம் என்று நான் உறுதி அளிக்கிறேன். செயல் வேகத்துடன், உறுதியுடன், உங்கள் இலக்குகளை நிறைவேற்ற தமிழ்நாடு முழு ஆதரவளிக்கும். வடிவமைப்பு, மேம்பாடு, உற்பத்தி மற்றும் ஏற்றுமதி ஆகியவற்றிற்கான முன்னணித் தளமாக தமிழ்நாடு திகழ வேண்டும்! அதற்கு உங்கள் எல்லோருடைய ஆதரவும் தேவை!**

பாதுகாப்பு அமைச்சகம், D.R.D.O. மற்றும் நம்முடைய பாதுகாப்பு பொதுத்துறை நிறுவனங்கள் தங்களின் தொழில்நுட்பம், திறன் மற்றும் ஒத்துழைப்பை வழங்கி, இந்த பயணத்தில் எங்களோடு இணைந்து செயல்படுகிறார்கள். புதிய கூட்டுத் திட்டங்கள், உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் வான்வெளி, கடல், விண்வெளி துறைகளில் புதிய தொழில் முயற்சிகளுக்கான தொடக்க மேடை தான், இந்த மாநாடு!

இன்று இந்த நிகழ்வில். எங்களோடு இணைந்திருக்கும் 19க்கும் மேற்பட்ட நாடுகளுடன் சேர்ந்து, தொழில் வளர்ச்சிக்காக செயல்படுவோம் என்று நான் உறுதி அளிக்கிறேன். செயல் வேகத்துடன், உறுதியுடன், உங்கள் இலக்குகளை நிறைவேற்ற தமிழ்நாடு முழு ஆதரவளிக்கும். வடிவமைப்பு, மேம்பாடு, உற்பத்தி மற்றும் ஏற்றுமதி ஆகியவற்றிற்கான முன்னணித் தளமாக தமிழ்நாடு திகழ வேண்டும்! அதற்கு உங்கள் எல்லோருடைய ஆதரவும் தேவை!

வானூர்தி, விண்வெளி, கப்பல் உற்பத்தி மற்றும் பாதுகாப்புத் துறைகளில் புதுமைகள் நிறைந்த ஏற்றுமதிக்கு உகந்த தன்னிறைவு பெற்ற இந்தியாவை உருவாக்க பாதுகாப்புத்துறையில் பணியாற்றும் நண்பர்களுக்கும், அறிவியலாளர்களுக்கும், தொழில் முனைவோர்களுக்கும், முதலீட்டாளர்களுக்கும் தமிழ்நாடு அரசு எப்போதும் துணை நிற்கும். இது, ஒரு புதிய காலத்தின் தொடக்கமாக அமையட்டும்! இந்தியாவின் பாதுகாப்பை மட்டுமல்ல, உலக அமைதி, வளம் மற்றும் முன்னேற்றத்தை இயக்கும் ஆற்றலாகவும் தமிழ்நாடு திகழட்டும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### அரியலூர் நகரத்தில்

# ஆலந்துறையார் கோதண்டராமசாமி திருக்கோயில் தேரோட்டம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர், அக். 8 -

அரியலூர் மாவட்டம் அரியலூர் நகரில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க, ஆலந்துறையார் கோதண்டராமசாமி திருக்கோயில் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயிலில் புதிய திருத்தேர் திருப்பணியானது துவங்கப்பட்டது.

திருத்தேரோட்ட விழாவானது நேற்று முன்தினம் நடைபெற்றது. இத்திருத்தேரோட்ட விழாவில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டு திருத்தேரினை பக்தகோடிகளுடன் வடம் பிடித்து இழுத்து துவக்கி வைத்தார்.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, அரியலூர் நகராட்சி தலைவர் சாந்தி கலைவாணன், நகராட்சி துணைத் தலைவர் கலியமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன், நகர கழகச் செயலாளர் இரா.முருகேசன், பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன், அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் பிரேமி, வட்டாட்சியர் (அரியலூர்) முத்துலெட்சுமி, கழக நிர்வாகிகள் இராஜேந்திரன், குணா, குமார், மாலா தமிழரசன், சண்முகம் மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### தமிழ் ஆர்வலர்

# சிங்கப்பூர் போப்ராஜ் மறைவு!

## தமிழ் அமைப்புகள் சார்பில் அஞ்சலி!

சிங்கப்பூர், அக். 8 -

சிங்கப்பூரில் பல தமிழ் அமைப்புகளுக்கு நிதி ஆதரவு தந்து வந்த புரவலராகவும், திமுக மாநில இலக்கிய அணியின் புரவலராகவும் இருந்த போப்ராஜ் என்றழைக்கப்பட்ட நாகை.தங்கராஜ் அவர்கள் 5அக்டோபர்2025 ஞாயிறு அன்று மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



சிங்கப்பூரில் பல்வேறு தமிழ் கவிதை மற்றும் இலக்கிய நூல்கள் வெளியிடுவதற்கும் இலக்கிய நிகழ்ச்சிகள் நடத்துவதற்கும் நிதி ஆதரவு வழங்கி வந்தது மட்டுமன்றி தமிழ் நாட்டிலும் பல அறச்செயல்களைத் தொடர்ந்து செய்து வந்தவர் போப்ராஜ் அவர்கள்.

பயண முகவராகப் பணியாற்றிப் பின் சொந்தமாக ஜோஸ்கோ பயண நிறுவனத்தை கட்டியெழுப்பி வெற்றிகரமாக நடத்தி வந்தவர் போப்ராஜ் அவர்கள்.

கழகத்தின் மீதும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மீதும் முதல்வர், தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீதும் தீராப் பற்றுக் கொண்டவர். தி.மு.க இலக்கிய அணியின் முன்னாள் மா நிலத் தலைவர் தஞ்சைக் கூத்தரசன் அவர்களோடு நெருங்கிய நண்பராக இருந்தார். தி.மு.க இலக்கிய அணியின் சார்பில் அறிவாலயத்தில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 86ஆவது பிறந்தநாள் விழா ஒன்றில், போப்ராஜ் அவர்கள் முன்னிலை வகித்து உரையாற்றி இருக்கிறார்.

சென்ற ஆண்டு சிங்கப்பூரில் சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகம் கலைஞர் நூற்றாண்டு விழாவை "கலைஞர் இலக்கியம் என்ற கருத்தரங்கமாக நடத்திய போது, அந்த நிகழ்வுக்குத் தலைமை ஏற்றதுடன், அந்த நிகழ்வின் முழுச்செலவையும் ஏற்றுக் கொண்ட, அவரின் அன்பை மதிப்புடன் நினைத்து அஞ்சலி செலுத்துகிறோம்.

இழப்பில் வாடும் நாகை தங்கராஜு அவர்தம் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு சிங்கப்பூர் தமிழ் அமைப்புகள் சார்பில் அறிவித்துள்ளனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் அரசு பென்லேண்ட் பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவ மனைக்கு ஐ.டி.பி.ஐ. வங்கி சார்பில் ரூ.20 லட்சம் மதிப்பில் மொபைல் எக்ஸ்ரே கருவி மற்றும் வாகனத்தை வங்கி துணைப் பொது மேலாளர் ரேவதி ஜெயபாலாஜி வழங்கினார். உடன் மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், 2 வது மண்டல குழுத் தலைவர் வீனஸ் ஆர்.நரேந்திரன், பகுதிச் செயலாளர் வி.ஜி.கே.சுந்தரவிஜி, பாலமுரளி கிருஷ்ணா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மதுரை மேற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பரவை பேரூராட்சியில் மெயின் ரோடு முதல் வைகை ஆறு வரையிலான புதிய சாலை அமைப்பதற்கான பணிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி துவக்கி வைத்தார். உடன் கழக நிர்வாகிகள் மனோகரன், ராசாமணி, ஆர்.கே.ஜெயராமன், சிறைச்செல்வன், என்.எஸ்.மணி, பாலசுப்ரமணியம், அன்புச்செல்வன், துரை சரவணன், நாகேஸ்வரி திலகர், திருஞானக்கரசி திருப்பதி உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.